# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

*

## ஏழாம் வகுப்பு

பதிவு எண் :

## சமூக அறிவியல்

நேரம் : 1.30 மணி பகுதி - அ மதிப்பெண்கள் : 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 x 1 = 5

1. விஜயநகர கட்டிட தூண்களில் பெரும்பாலும் காணப்படும் விலங்கு எது?
அ) யானை ஆ) குதிரை
இ) பசு ஈ) மான்

2. சங்கம வம்சத்தின் மிகச்சிறந்த ஆட்சியாளர் யார்?
அ) புக்கர் ஆ) தேவராயர்
இ) ஹரிஹரர் II ஈ) கிருஷ்ணதேவராயர்

3. மிகப்பெரிய சூரிய ஆற்றல் திட்டம் இந்தியாவில் எங்கு அமைந்துள்ளது?
அ) கமுதி ஆ) ஆரல்வாய்மொழி
இ) முப்பந்தல் ஈ) நெய்வேலி

4. நிலக்கரியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம்
அ) அனல் மின்சக்தி ஆ) அணுசக்தி
இ) சூரிய ஆற்றல் ஈ) நீர் ஆற்றல்

5. முதல் அமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்களை நியமிப்பவர்
அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதமர்
இ) ஆளுநர் ஈ) தேர்தல் ஆணையர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5 x 1 = 5

6. விஜயநகர பேரரசர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களுக்கு ________ என்று பெயர்.
7. ஆரவீடு வம்சத்தின் தலைநகர் ________.
8. பாக்சைட் தாதுவிலிருந்து பிரித்தெடுக்கப்படும் உலோகம் ________.
9. தமிழ்நாட்டில் இரும்பு தாதுக்கள் காணப்படும் இடம் ________.
10. ச.ம.உ. என்பதன் விரிவாக்கம் ________.

**III. பொருத்துக.** 5 x 1 = 5

11. தெனாலி ராமகிருஷ்ணா - இரும்பு
12. சுண்ணாம்புக்கல் - பெரும்பான்மை கட்சித் தலைவர்
13. உலோக வளம் - தலைமைச் செயலகம்
14. முதல் அமைச்சர் - பாண்டுரங்க மகாத்மியம்
15. புனித ஜார்ஜ் கோட்டை - படிவுப்பாறை

**IV. சரியா? தவறா?** 5 x 1 = 5

16. பாமினி அரசைத் தோற்றுவித்தவர்கள் ஹரிஹரர் மற்றும் புக்கர் ஆவர்.
17. இருபது ஆண்டுகள் ஆட்சி செய்த கிருஷ்ணதேவராயர் சங்கம வம்சத்தின் மிகச் சிறந்த அரசர் ஆவார்.
18. அஷ்டதிக்கஜங்களில் அல்லசாணி பெத்தண்ணா குறிப்பிடத்தகுந்தவராவார்.
19. ஹுமாயூன் 1565-ல் டெல்லியைக் கைப்பற்றினார்.
20. ஔரங்கசீப் இராஜபுதனப் பெண்ணைத் திருமணம் செய்தார்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி - ஆ

V. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும். (ஏதேனும் ஐந்து) 5 x 2 = 10

21. விஜயநகரப் பேரரசின் நான்கு வம்சங்களில் மிகச்சிறந்த ஆட்சியாளர்களை எழுதுக.
22. தலைக்கோட்டைப் போரைப் பற்றி எழுதுக.
23. தக்காண சுல்தானத்தின் ஐந்து சுதந்திர அரசுகள் யாவை?
24. வளங்கள் - வரையறு.
25. உலகின் சூரிய ஆற்றலைப் பயன்படுத்துவதில் முதன்மையான நாடுகள் யாவை?
26. கார்பன் அளவின் அடிப்படையில் நிலக்கரியின் வகைகளைக் கூறு.
27. லோக் அதாலத் பற்றி எழுதுக.
28. சட்டமன்ற தொகுதி என்றால் என்ன?

பகுதி - இ

VI. விரிவான விடையளிக்கவும். (ஏதேனும் மூன்று) 3 x 5 = 15

29. கிருஷ்ணதேவராயரின் பணிகள் மற்றும் சாதனைகளை எழுதுக.
30. புதுப்பிக்க இயலா வளங்கள் குறித்து விரிவாக எழுதவும்.
31. *அ) வேறுபடுத்துக :*
    i) உயிருள்ள வளங்கள் - உயிரற்ற வளங்கள்
    ii) புதுப்பிக்கக்கூடிய வளங்கள் - புதுப்பிக்க இயலா வளங்கள்

    *ஆ) காரணம் கூறுக.*
    நீர் ஓர் சிறந்த ஆற்றல் மூலமாகக் கருதப்படுகிறது.
32. முதலமைச்சர் மற்றும் கேபினெட் அமைச்சர்களின் பணிகள் யாவை?

பகுதி - ஈ

VII. கீழ்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும். 5 x 1 = 5

33. (ஏதேனும் ஐந்து)

அ) டெல்லி
ஆ) தலைக்கோட்டை
இ) தஞ்சாவூர்
ஈ) மதுரை
உ) சூரத்
ஊ) தேவகிரி
எ) கள்ளிக்கோட்டை
ஏ) வங்காளவிரிகுடா

******

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com